பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 11 திங்கட்கிழமை 26.12.2022 கதிர் 51

### இனி அது ரகசியம் அல்ல!

இரண்டுதினங்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் யாழ்ப்பாணம்மேயர்மணிவண்ணனின் முகநூல் பதிவு ஒன்றைக் குறிப்பிட்டு அதையொட்டிய விமர்சனங்களை சற்றுச் சூடாக வைத்திருந்தேன்.

இந்த முகநூல் ☞2



## ஜோசப் பரராஜசிங்கத்தின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல்

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடை ற்றது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ☞2

# இந்தியாவின் பங்களிப்பு பேச்சின் போது தொடரும்

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



**தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அரசுடனான பேச்சின் போது இந்தியாவின் பங்களிப்பு தொடரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசுடனான பேச்சின் போது இந்தியாவின் மத்தியஸ்தம் அல்லது மேற்பார்வை அவசியம் என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மற்றும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திய சி.வி. விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டவர்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ள நிலையிலேயே இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.** ☞2



## ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்

### பல்வேறு இடங்களில் இன்று அஞ்சலி நிகழ்வுகள்

மக்களின் மனங்களில் ஆறாத ரணமாய் படிந்த 'சுனாமி' எனும் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று பல்வேறு இடங்களில் நடைபெறவுள்ளது. ☞2



## ஒட்டுக்குழுவினரின் கொடூரம் இனிமேல் அரங்கேறக்கூடாது

### மாமனிதர் பரராஜசிங்கத்தை நினைவேந்தி கூட்டமைப்பு எம்.பி. சாணக்கியன் கருத்து

ஒட்டுக்குழுவினர் எமது மக்களுக்கு இழைத்த கொடூரங்கள், துரோகங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருக்கக் கடவுளை இந்நன்னாளில் பிரார்த்திக்கின்றேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 17ஆம் ☞2

## இலங்கையில் இன்று விசேட அரச விடுமுறை

நாட்டில் நத்தார் தினத்தையொட்டி இன்று விசேட அரச விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அரச பொது நிர்வாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்னல் தாக்கியதில் 27 கால்நடைகள் சாவு!



மட்டக்களப்பு – ஏறாவூர் பகுதியில் உள்ள கால்நடைப் பண்ணையில் மின்னல் தாக்கியதில் ஆடுகள் மற்றும் கோழிகள் உள்ளிட்ட 27 கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அத்துடன், மின்னல் தாக்கியதில் குறித்த கால்நடைப் பண்ணை முற்றாகச் சேதமாகியுள்ளது.

## சர்வதேச மத்தியஸ்தம் இல்லாத பேச்சு காலத்தைக் கடத்தும் ஏமாற்றுச் செயலே

### சாடுகின்றார் சார்ள்ஸ் எம்.பி.



சர்வதேச நாடுகளுடைய மத்தியஸ்தம் இல்லாமல் இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவது என்பது காலத்தைக் கடத்துகின்ற ஏமாற்றுச் செயலாகத்தான் இருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ☞2

## தமிழர் அபிலாஷையை வென்றெடுக்கும் பயணத்தில்

# அரசியல் கட்சிகள் தனித்தனியாகச் செல்ல முடியாது; தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிடவும் முடியாது!

## செல்வம், சித்தரிடம் மாவை நேரில் எடுத்துரைப்பு



தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காகப் பயணித்துக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் தனித்தனியாகச் செல்ல முடியாது. தேர்தல்களின் போது தனித்தனியாகப் போட்டியிடவும் முடியாது.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ) மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோருக்கும், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது. இதன்போதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவிட்டபுரத்தில் உள்ள ☞10

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணக்கு அவரது படங்கள், செய்திகளுடன் 2019 ஜூன் முதல் கடந்த மூன்றரை ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. பொதுத் தேர்தலில், அவர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளராகக் களம் இறங்கிய காலத்திலும், இது அவருக்காகச்செயற்பட்டதுஎன்பதுதெரிகிறது. அன்று முதல் நேற்று முன்தினம் வரை அவர் சார்பான - அவருக்கு பிரசாரம் செய்யும் - அவரது முகநூலாகவே அந்தக் கணக்கு செயற்பட்டுள்ளது. அவருக்கு எதிரான அல்லது பாதிப்பான செய்திகள் எதுவும் அதில் வந்ததாகத் தெரியவில்லை.

எனது விமர்சனத்திற்கு அடுத்த நாள், அதாவது நேற்று முன்தினம், அது தனது சொந்த முகநூல் கணக்கு அல்ல,வேறு யாரோ அவரின் பெயரில் அதை இயக்குகின்றார்கள் என்ற சாரப்பட்ட செய்தியை மணிவண்ணன்அனுப்பியிருக்கின்றார்.

என் விமர்சனம் தொடர்பிலும், அந்த முகநூல் கணக்கு தம்முடையது அல்ல என்ற மேயர் மணிவண்ணன் கூறும் தகவல் தொடர்பிலும் தீர்மானம் எடுக்கும் பொறுப்பை என் வாசகர்களிடமே விட்டு விடுகிறேன்.

***

இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய குழுவைக் கூட்டிவாங்கிக் கட்டத்தயாராகி வருகின்றார் மாவை சேனாதிராஜா என்று எனக்குத் தோன்றுகிறது.

வரப் போகின்றது உள்ளூராட்சித் தேர்தல். ஆயத்து மணி கேட்கிறது.

இந்தத் தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னர் போன்று ஓர் அணியாகக் கேட்பதா அல்லது பங்காளிக் கட்சிகள் தனித்தனியாக எதிர்கொள்வதா என்ற இழுபறி இன்னும் கூட்டமைப்புக்குள் தீரவில்லை. எதிரும் புதிருமான கருத்துக்கள் நீடிப்பது தெரிந்ததுதான்.

அந்தப் பிரச்சினையைக் கூட்டமைப்புக்குள் இன்னும் பேசி முடிக்காத கூட்டமைப்பின்பிரதான கட்சியான தமிழரசின் தலைவர் மாவை சேனாதிராஜா, அதற்கிடையில் கூட்டமைப்புக்கு வெளியில் இருக்கும்மூன்று கட்சிகளை (கூட்டமைப்புக்கு எதிராகக் கூட்டணி அமைத்திருக்கும் விக்கியின் தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஷின் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஸ்ரீகாந்தா - சிவாஜிலிங்கம் இணையின் தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய) மேலும் மூன்று கட்சிகளைக் கூட்டி ஒன்றாகத் தேர்தலை எதிர்கொள்வது பற்றி பேசுகிறார். அது பற்றிய கலந்துரையாடலையும் ஆரம்பித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் கூட்டமைப்புக்குள் ஓர் இணக்கத்தை எட்ட முடியாதவர், அதற்கு வெளியிலும் மூன்று கட்சிகளைச் சேர்த்துப் பொது இணக்கம் காண முயல்கின்றமை, 'மூஞ்சூறு தான் போக வழியைக் காணோமாம், அதற்கிடையில் விளக்குமாற்றையும் தூக்கியதாம்' என்ற கதையாக இருக்கின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆறு கட்சி கூட்டத்தில், மேற்படி ஒன்றுபட்டுத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து அடுத்த வாரத்தில் தமிழரசு மத்திய குழுவைக் கூட்டி அதற்கு அனுமதி பெற்றுத் தாம் வருவார் என்று அங்கு உறுதி அளித்திருக்கின்றார் மாவையர்.

இப்போது வரும் ஜனவரி 6 அல்லது 7 ஆம் திகதி அந்த மத்திய குழுவைக் கூட்ட திட்டமிடுகிறார் அவர் எனத் தெரிகிறது.

கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தாமல் இழுத்தடித்து, அதற்காக மத்திய குழுவைக் கூட்ட வேண்டிய கைங்கரியத்தையும் செய்யாமல், காலதாமதித்து வரும் அவர், இப்போது ஏனைய கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு 'மெகா கூட்டணி' அமைத்து உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்க வியூகம் அமைத்து, அதற்காக மத்திய குழுவைக் கூட்டத் தயாராகிறார்.

இதற்கிடையில் நேற்றுக் காலை மாவை சேனாதிராஜாவை அவரது காங்கேசன்துறை இல்லத்தில் சந்தித்த கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன், இப்படி ஒரு கூட்டுக்காக மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டுவது உசிதமல்ல என்று தலைவருக்குக் கோடி காட்டி இருக்கின்றார் எனத் தெரிகிறது.

ஆனால் இந்த நோக்கத்துக்காக மத்திய குழுவை அவர் கூட்டப் போகின்றார் என்ற தகவல், நேற்றிரவே யாழ்ப்பாணத்திலும், கிழக்கிலும் உள்ள தமிழரசு பிரமுகர்களிடையே பரபரப்பையும் எரிச்சலையும் சீற்றத்தையும் உருவாக்கி இருப்பதை அறிய முடிந்தது.

"தமிழரசு கட்சியின் அரசியல் குழுவிலோ, மத்திய குழுவிலோ அல்லது உயர்மட்டத் தலைவர்களுடனேயோ உரையாடாமல் இப்படி மாற்றுக் கட்சிகள் அழைக்கும் கூட்டங்களுக்கு எல்லாம் கண்மூடிக் கொண்டு போகாதீர்கள் எனப் பலகூட்டங்களில்வைத்துஉறுப்பினர்கள், சிரேஷ்ட தலைவர்கள் பலர் எடுத்துக் கூறியும், அந்த ஆலோசனைகள் எவற்றையும் மதிக்காமல், தம்பாட்டில் தலைவர்செயற்படுவது வாடிக்கையாகிவிட்டது. கூட்டத்தை கூட்டட்டும். அங்கு பார்ப்போம்." - என்று கூறினார் ஒரு சிரேஷ்ட தலைவர்.

"செயலிழந்து சேடம் இழுத்துக் கொண்டிருக்கும் விக்கியின் கட்சிக்கும், சிவாஜியின் கட்சிக்கும் விற்றமின் ஊசி ஏற்றிதேற்றும்-உஷாப்படுத்தும்-வேலை போல, அவற்றைக் கூட்டமைப்புடன் கூட்டுச்சேர வைத்து, உஷார் கொடுக்க வைக்கிறார் இந்த முட்டாள்தனமான அரசியல் தலைவர்" - என்று தமிழரசு மூத்த புள்ளி ஒருவர் சாடினார்.

"இதெல்லாம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நகர்வுகள் அல்ல. மாகாண சபை தேர்தலில் ஏகமனதாக முதலமைச்சர் வேட்பாளராகத்தான் களமிறங்கும் நப்பாசையில் - பகல் கனவில் - களத்தை இப்படி உழுது, ஆதரவு தேடித் தமக்குச் சாதகமாக்க முயல்கிறார் மாவையர். ஆனால் அது வெறும் பகல் கனவாகவே முடியும்." - என்று மாவையின் முன்னாள் வலது கரம் ஒன்று குசுகுசுத்தது.

இன்று முன்னிரவு இலங்கைத் தமிழரசின் அரசியல் குழு சூம் முறையில் கூடவுள்ளது.

ஆறு கட்சிகள் ஒன்றாகத் தேர்தலில் நிற்பது பற்றிய திட்டத்திற்கு அந்தக் கட்சிகளின் கூட்டத்தில் மாவை காட்டியிருக்கும் பச்சைக்கொடி, இன்றைய அரசியல் குழுவின் கூட்டத்துடன் சிவப்பாக மாறுமோ தெரியவில்லை. விவரத்தை நாளை பார்ப்போம்.

**- மின்னல் -**

## இந்தியாவின் பங்களிப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பெற்றுக்கொள்வதற்கான பயணத்தில் இந்தியாவின் வகிபாகம் மிகவும் முக்கியமானது.

இலங்கையில் தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் அத்தனை விடயங்களையும் இந்தியா நன்கு அறிந்துள்ளது. குறிப்பாக, 1983ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களின் விவகாரம் சம்பந்தமாக இந்தியா விசேடமாக கரிசனை கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகவே 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தமானது கைச்சாத்திடப்பட்டது.

அதன் பின்னரான காலத்திலும், தமிழ் மக்களின் விவகாரங்களில் இந்தியா முழுமையான பங்களிப்பைச் செய்தே வந்துள்ளது. இந்நிலையில் தற்போது இந்தியாவின் பங்களிப்பைப் புதிதாகக் கோர வேண்டியதில்லை.

தற்போது தமிழர் தரப்புக்கும் அரசுக்கும் இடையில் முன்னெடுக்கப்படும் பேச்சின் போதும் இந்தியாவின் வகிபாகம் நிச்சயமாக இருக்கும். தற்போதைய சூழலில் அந்த வகிபாகம் எவ்வாறானது என்று வரையறுக்கப்படாவிட்டாலும், நிச்சயமாக இந்தியா தனது பாத்திரத்தை முக்கியமானதாக வகிக்கவுள்ளது.

அந்தவகையில், தமிழ் மக்கள் தமது நியாயமான அபிலாஷைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தியா நிச்சயமாக தனது பங்களிப்பை பூரணமாகவும் அர்ப்பணிப்புடனும் வழங்கும் - என்றார்.

## ஜோசப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வராசா கஜேந்திரன், மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகர், மகளிர் அணிச் செயலாளர் கிருபா கிரிதரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## ஆழிப்பேரலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக நாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்ததோடு பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இந்நிலையில், நாட்டிலுள்ள சுனாமி நினைவாலயங்களில் இன்று காலை 8 மணி முதல் சர்வமத வழிபாடுகள் நடைபெற்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும் எனவும், அனைவரையும் இதில் பங்கேற்குமாறும் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## சர்வதேச மத்தியஸ்தம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் வைத்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டினுடைய புதிய ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை நோக்கிய அறிவிப்பு அல்லது முன்மொழிவைப் பல இடங்களில் கூறி இருக்கின்றார். அவர் கூறுவதற்குச் சர்வதேச நாடுகளுடைய அழுத்தங்கள் காரணமாக இருக்கலாம்.

ஏனென்றால் இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியைச் சர்வதேச நாடுகளுடைய உதவி இல்லாமல் சமாளிக்க முடியாது. அந்த நெருக்கடியில் இருந்து மீளவும் முடியாது.

ஆகவே, சர்வதேச நாடுகளைத் திருப்திப்படுத்துவதற்கு நாட்டினுடைய ஜனாதிபதி இந்த முன்மொழிவை முன்வைக்கக் கூடும்.

ஆனால், தமிழ்க் கட்சிகள், வடக்கு - கிழக்கில் இருக்கின்ற மதத் தலைவர்கள் தீர்வுத் திட்டம் தொடர்பில் ஓர் இணக்கப் பாட்டுக்கு வர வேண்டும்.

வெறுமனே இலங்கை அரசுடன் பேசி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வைப் பெறுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

குறிப்பாக சர்வதேச நாடுகளுடைய மத்தியஸ்தம் குறிப்பாக இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளில் ஏதோவொரு நாட்டின் மத்தியஸ்தம் இல்லாமல் இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவது என்பது காலத்தைக் கடத்துகின்ற ஏமாற்றுச் செயலாகத்தான் இருக்கும். அப்படியான பேச்சு மூலம் தமிழ் மக்களுக்குரிய இறைமை - உடன் வாழக் கூடிய தீர்வு வரும் என்று எனக்கு நம்பிக்கை இல்லை - என்றார்.

## ஒட்டுக்குழுவினரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு நினைவேந்தல் தினம் நேற்றாகும். இந்நிலையில் அவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட அதே மட்டக்களப்பு புனித மரியன்னை தேவாலயத்தில் நடந்த நத்தார் தின ஆராதனையில் கலந்துகொண்டதன் பின்னர் கருத்து வெளியிடும்போதே சாணக்கியன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம்

(10ஆம் பக்கம் பார்க்க)






காலைக்கதிர் Kalaikkathir

# பெண்களின் பாதுகாப்பு தற்சார்பு பொருளாதாரம் இ.தொ.காவின் 2023 ஆம் ஆண்டுக்கான இலக்கு!

## பாரத் அருள்சாமி அறிவிப்பு



2023 ஆம் ஆண்டு இலங்கையின் 75 ஆவது சுதந்திரதினமும் இந்திய வம்சாவளி மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் வரலாற்றுத் தடம் பதிக்கும் ஆண்டாகும். இந்நிலையில் பொருளாதார அபிவிருத்தியை மையமாகக் கொண்டு பல வேலை திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடு அமைப்பு அமைச்சின் பிரஜா சக்தி பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கான சுகாதாரப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்விலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக பெண்கள் தங்களது குடும்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தங்களது சுகாதார மற்றும் பாதுகாப்பு வசதிகளை பிள்ளைகளுடைய கல்வியை மேற்கொள்ளவும் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள்.

எனவே 2023 ஆம் ஆண்டு தொழில் முனைவோருக்கான ஆண்டாக மாற்ற பல வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுக்க உள்ளோம். அதே சந்தர்ப்பத்தில் மாணவர்களுடைய எதிர்காலத்தைப் பாதுகாக்கும் நோக்கில் போதைப் பொருளுக்கு எதிரான பல வேலைத் திட்டங்களையும் நாம் முன்னெடுத்துள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த நிகழ்வில் தெல்தோட்ட பிரதேச செயலாளர் திருமதி ஆத்மா, பிரதேச செயலக அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள், பிரஜா சக்தி அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# எப்பாவலவில் காணாமல்போன சிறுவன் நேற்று கண்டுபிடிப்பு!

எப்பாவல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிலோகம, கெட்டிவுல பிரதேசத்தில் காணாமல் போன சிறுவன் சனிக்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

சிறுவனை அழைத்துச் சென்றதாகச் சந்தேகிக்கப்படும் 45 வயதுடைய மின்சார உபகரணங்கள் திருத்துநரும் சிறுவனும் ரிக்கிலகஸ்கட பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வியட்நாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 152 பேர் மீண்டும் நாடு வர விருப்பம்!

கனடாவிற்கு சட்டவிரோதமாக படகு மூலம் பயணித்தபோது விபத்தில் சிக்கி, வியட்நாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 152 இலங்கையர்கள் மீண்டும் இலங்கைக்கு வர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

படகு பழுதடைந்த நிலையில் வியட்நாமில் தங்கவைக்கப்பட்டுள்ள 302 இலங்கையர்களில் 152 இலங்கையர்கள் மட்டுமே இவ்வாறு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, குறித்த 152 பேரும் நாடு திரும்புவதற்குத் தேவையான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன என வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கோரிக்கைக்கு இணங்க 302 இலங்கையர்களுக்கு உதவியமைக்காக ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்புக்கு அமைச்சர் இதன்போது நன்றி அவர் தெரிவித்தார்.

# இணைய வழி பண மோசடியுடன் தொடர்புடைய மூன்று பேர் கைது!

கையடக்கத் தொலைபேசி செயலி மூலம் பல்வேறு நபர்களின் தனிப்பட்ட விவரங்களைப் பெற்று, அவர்களின் வங்கிக் கணக்குகளில் ஒரு கோடிக்கும் அதிக பண மோசடியில் ஈடுபட்ட 3 சந்தேகநபர்கள் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அண்மையில் இது தொடர்பில் 12 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இணைய வழியூடான பொருள் விற்பனைக்காக நபர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ளிட்ட தனிப்பட்ட தகவல்களைப் பெற்று அதன் மூலம் மோசடி செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு குறித்த சந்தேகநபர்கள் பல்வேறு நபர்களிடம் இருந்து ஒரு கோடி ரூபாவிற்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது. அத்தோடு இவர்கள் ஏ.டி.எம். இயந்திரத்திலும் கொள்ளையிட்டமையும் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் பாவனைக்காகவே தாம் இவ்வாறான கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர் என சந்தேகநபர்கள் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளனர்.

இணையதளத்தினூடான பணப்பறிமாற்றல், பொருள் கொள்வனவு தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# நாரஹேன்பிட்டியிலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்குள் நுழைந்த கும்பல் கைது!

நாரஹேன்பிட்டியில் உள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு வந்து பணம் மற்றும் முக்கிய ஆவணங்களை எடுத்துச் சென்ற குழுவினரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இருபத்தி இரண்டு பேர் கொண்ட குழுவொன்றே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொறளை பொலிஸ் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்களில் போதைப் பொருள் குற்றச்சாட்டுகள் உட்பட பல குற்றங்களுடன் தொடர்புடையவர்களும் இருக்கின்றனர் என அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

# 125 நவீன ரக பொலிஸ் ஜீப்களை இலங்கைக்கு வழங்கியது இந்தியா!





இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு இந்தியாவால் 125 நவீன ரக பொலிஸ் ஜீப்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவிடமிருந்து பாதுகாப்புப் படைகளுக்கு தேவையான 500 வாகனங்களைப் பெற்றுக் கொள்ளும் 10 கோடி ரூபா டொலர் கடன் திட்டத்தின் கீழ் முதற்தொகுதியாக இவை கையளிக்கப்பட்டுள் என.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவால், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன உள்ளிட்டோரிடம் குறித்த ஜீப் வாகனங்கள் கையளிக்கப் பட்டன.

'அயல்நாட்டுக்கு முதலிடம்' கொள்கைக்கு அமைய இந்திய அரசாங்கம் இலங்கை மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கிவருகிறது.

அதற்கமைய தற்போது வரை ரயில் திணைக்களம், உட்கட்டமைப்பு, பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, பெற்றோலியம், உரம் வழங்கல் போன்ற பல்வேறு துறைகளில் சுமார் 320 கோடி ரூபா டொலர் பெறுமதியான கடன்கள் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன என இந்திய உயர் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாகக் கடந்த மார்ச்சில் உணவு, மருந்துகள், எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்காக 100 கோடி ரூபா டொலர் சலுகைக் கடன் வசதியை நீடித்தமை குறிப் பிடத்தக்கது என இந்திய உயர் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

# வலிகாமம் கிழக்கு பிரதேச நூலக விழா நடைபெற்றது





வலிகாமம் கிழக்கு பிரதேச சபயின் புத்தூர் நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் நுலகர் திருமதி கர்சனமாலா உதயகுமாரன் தலைமையில் கடந்த புதன் கிழமை சிறப்புற நடைபெற்றன.

தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகர் சிவபாக்கியநாதன் கேதீஸ்வரன், சபையின் செயலாளர் இராமலிங்கம் பகீரதன், சோமஸ்கந்தா கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தமையுடன் அரச அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் நூலகத்தால் வருடாந்தம் வெளியிடப்படும் புதுவை நாதம் நூலை, தவிசாளர் தியாகராஜா நிரோஷ் வெளியிட்டு வைக்க நூலின் முதற் பிரதியை சித்த சுதேச வைத்தியர் இளையவன் செல்லத்துரை பெற்றுக்கொண்டார். தொடர்ந்து நூலுக்கான நயவுரையை ஆசிரியர் திருமதி கேதீஸ்வரி ஆனந்தராட்ணம் ஆற்றியிருந்தார்.

இந்தத் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளில் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள், அதிதிகளின் உரைகள், அரிச்சுவடி முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள் என பலதரப்பட்ட தமிழர் பண்பாட்டைப் பிரபலிக்கும் வகையிலான கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. மேலும் உள்ளூராட்சி நூலக வாரத்தை முன்னிட்டு பிரதேச சபையின் நூலகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

பிரதேசத்தில் சிறந்த வீட்டு நூலகத்தை முகாமை செய்வதற்கான கௌரவம் ப. கஜேந்திரனுக்கு வழங்கப்பட்டமையுடன் சிறந்த வீட்டுத் தோட்ட பயனாளிகளுக்கான கௌரவிப்புக்களும் இடம்பெற்றன.

மேலும், நூலகங்களுக்கு இடையில் தேசிய நூலக மற்றும் சுவடிகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் போட்டியில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் நூலகம் நாடளாவிய ரீதியில் 3 ஆம் இடத்தைப் பெற்றது.

இந்த விருதினை கடந்த வாரம் ஜயவர்த்தன பல்கலைக்கழக துணைவேந்தாரிடம் நூலகர் திருமதி கர்ஜனமாலா உதயகுமாரன் பெற்றுக்கொண்டார். அந்த விருதை இந்த நிகழ்வில் வைத்து பிரதேச மக்களுக்கு அறிமுகப்படுத்தியதுடன் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷிடம் சபையில் காட்சிப்படுத்துவதற்காக நூலகரால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணில் வகுக்கும் திட்டம்

**புதிய அரசியல் நகர்வு ஒன்றுக்குத் திட்டமிட்டு தயாராகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று செய்திகள் கசிந்துள்ளன.**

**இன்றைய நிலையில் வரக் கூடிய உள்ளூராட்சித் தேர்தல் என்பது நாட்டின் அரசாங்கத்தை – நிர்வாகத்தை – தீர்மானிக்கும் ஒன்று அல்ல.**

**ஆட்சித் தலைமையின் மீது மக்களுக்கு உடன்பாடில்லை, ஆகவே தேர்தலை நடத்துவதுதான் ஒரே வழி என்கின்றன பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. மற்றும் 'அறகலய' போராட்டத் தரப்பு போன்றவை. அத்தரப்புகள் சுட்டிக் காட்டும் விவகாரத் துக்கு உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் விடை தரப் போவதில்லை.**

**ஆகையினால் எதிர்க்கட்சிகளின் பாதையிலேயே முன்னேறி, ராஜதந்திர காய் நகர்த்தலை முன்னெடுக்க வியூகம் வகுக்கின்றார் ஜனாதிபதி ரணில் என்று தெரிகின்றது.**

**'சவாலே சமாளி' என்ற மாதிரி நேரடியாக ஜனாதிபதித் தேர்தலில் இறங்கினால் தமது பதவியை தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று அவர் நம்புகின்றார்.**

**வடக்கு – கிழக்கில் சிறுபான்மை மக்களின் ஆதரவு, தென்புலத்தில் மொட்டுக் கட்சியின் இணக்கம் ஆகியவற்றுடன் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான அதிகாரத்தைத் தான் உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது என்ற முடிவுக்கு அவர் வந்து விட்டார்.**

**இப்போதைய சட்டங்களின்படி –**

*** வரும் மார்ச் 19 க்கு முன்னர் உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டும்.**

*** வரும் பெப்ரவரி நடுப்பகுதிக்குப் பின்னர் ஜனாதிபதி தாம் விரும்பிய நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொது த் தேர்தலுக்குப் போகலாம்.**

*** 2023 நவம்பர் நடுப்பகுதிக்குப் பிறகு, ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே அறிவித்து, 2024 ஜனவரியில் அதனை ஜனாதிபதி எதிர்கொள்ளலாம்.**

**– இந்த ஏற்பாடுகளிலேயே மாற்றம் செய்ய ரணில் விரும்புகிறார் எனத் தெரிகின்றது.**

**உள்ளூராட்சி தேர்தலை நடத்தாமல் இடை நிறுத்தி, பிறக்கப் போகும் புத்தாண்டின் ஆரம்பத்திலேயே முற்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தவும் அதில் தான் போட்டியிடவும் ரணில் விரும்புகின்றார்.**

**அதற்கு வசதி செய்யும் அரசமைப்பு திருத்தத்தைத் தான் கொண்டு வந்தால், முற்கூட்டிய தேர்தலுக்கு வற்புறுத்திக் கொண்டிருக்கும் பிரதான எதிர்க்கட்சிகளான சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே.வி.பியும் கூட அதை ஆதரிக்கத்தான் வேண்டும் என்ற கட்டாயம் உண்டு.**

**முற்கூட்டியே ஜனாதிபதி தேர்தலுக்கு வழிவகுக்கும் அந்த அரசமைப்பு திருத்தத்தை வைத்து, ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக எதிர்கொள்ள ரணில் தயாராகின்றார்.**

**இந்த வியூகத்தை சமாளிக்க தமிழர் தரப்பு உட்பட்ட சிறுபான்மை இன தரப்புகளும் ஒன்றுபட்டு பதில் தந்திரோபாய நடவடிக்கைகளை முன்னெடுப்பது முக்கியமாகும். அது பற்றி வரும் நாள்களில் தொடர்ந்து இப்பத்தியில் பார்க்கலாம்.**

## மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் நாட்டு மக்களுக்கு கடவுள்தான் துணை!

### பிரார்த்தனை செய்ய வேண்டும் என்கிறார் டலஸ்



நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் நாட்டு மக்களுக்கு கடவுள் துணை என பிரார்த்தனை செய்துகொள்ள வேண்டும்.

மின்கட்டண திருத்தம் தொடர்பான விடயத்தில் அரசாங்கம் உணர்வுபூர்வமாக செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸ் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளமைக்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. பொருளாதாரப் பாதிப்பின் சுமையை நாட்டு மக்கள் மீது முழுமையாக சுமத்த முடியாது.

அரசாங்கம் பல்வேறு செலவுகளைக் குறைத்துக்கொண்டால் மக்கள் மீதான வரி விதிப்பைக் கட்டுப்படுத்த முடியும்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அரசாங்கம் அமைச்சரவை அமைச்சுக்களை விஸ்தரித்துக்கொள்ள அவதானம் செலுத்தியுள்ளது.

38 இராஜாங்க அமைச்சுக்கள் அவசியமற்றவை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பொதுத்தேர்தல் இடம்பெறும் வரை ஓர் இராஜாங்க அமைச்சுக்களை கூட நியமிக்காமல் வரையறுக்கப்பட்ட அமைச்சுக்களுடன் அரச நிர்வாகத்தை முன்னெடுத்தார். இதனை அரசாங்கம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டும்.

மின்கட்டண அதிகரிப்பால் மக்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். நாட்டில் மொத்த மின்பாவனையாளர்களில் 30 அலகுக்கும் குறைவான மின் அலகைப் பாவிக்கும் 14 லட்சம் மின்பாவனையாளர்கள் உள்ளார்கள்.

இவர்கள் பொருளாதார ரீதியில் கீழ்நிலை மட்டத்தில் உள்ளவர்கள். இவ்வாறான நிலையில் மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் நாட்டு மக்களுக்கு கடவுள் தான் துணை எனப் பிரார்த்தனை செய்துகொள்ள வேண்டும்.

மின்கட்டண திருத்தம் தொடர்பான விடயத்தில் அரசாங்கம் உணர்வுபூர்வமாக செயற்பட வேண்டும். மக்களிடம் வளம் இருந்தால் தான் மின்கட்டணத்தை செலுத்துவார்கள்.

மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு கட்டணத்தை உயர்த்தினால் மக்கள் எவ்வாறு வாழ்வது என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும். – என்றார்.

## பிக்குகள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை கவலைக்குரியதே!

### பந்துல குணவர்த்தன வேதனை



பௌத்த அற கோட்பாட்டைப் போதிக்க வேண்டிய பிக்குகள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை கவலைக்குரியது.

நாட்டுக்குள் திட்டமிட்ட வகையில் போதைப்பொருள் பாவனை வியாபித்துள்ளது என போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மஹரகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொருளாதார ரீதியில் நாடு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டில் போதைப்பொருள் பாவனை சடுதியாகத் தீவிரமடைந்துள்ளது. இளம் தலைமுறையினர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார்கள். இந்நிலை தொடர்ந்தால் நாட்டின் எதிர்காலம் முழுமையாக கேள்விக்குள்ளாகும்.

ஒரு நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்படும் போது அந்த நாட்டில் சட்டம் மற்றும் அடிப்படை ஒழுக்கத்துக்கு மாறான செயற்பாடுகள் தலைதூக்கும். இலங்கையிலும் தற்போது அவ்வாறான தன்மை காணப்படுகிறது. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் சமூக விரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

பௌத்த அற கோட்பாட்டைப் போதிக்க வேண்டிய பிக்குகள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை கவலைக்குரியது. பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகம் தொடர்பில் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை உணர்வுபூர்வமாக பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திட்டமிட்ட வகையில் நாட்டில் போதைப்பொருள் பாவனை வியாபித்துள்ளது. போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனையை இல்லாதொழிக்க 09 மாகாணங்களிலும் விசேட போதைப்பொருள் செயலணியை ஸ்தாபிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. – என்றார்.

## சர்வதேச மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி மாநாட்டுக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை!

சர்வதேச மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான மாநாடு அடுத்த வருடம் இடம்பெறவுள்ளமை தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார்.

அதற்குரிய சகல ஏற்பாடுகளையும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன ஆகியோருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் எரிக் சொல்ஹெய்ம், ருவான் விஜேவர்தன ஆகியோருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

உலகின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் ஈடுபட்டுள்ள பல தலைவர்களை இலங்கைக்கு அழைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டுக்கு வரும் முக்கிய நிறுவனங்களின் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையை மேம்படுத்த திட்டமிட்டுள்ளதாக காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

உலகப் புகழ்பெற்ற வர்த்தகரான பில்கேட்ஸை இலங்கைக்கு வரவழைத்து, அவருடன் இணைந்து காலநிலை மாற்ற முகாமைத்துவத் திட்டத்தை ஆரம்பிக்கவும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், பருவநிலை மாற்ற சட்ட மூலத்தை அடுத்த ஆண்டு முதல் காலாண்டில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# சட்டவிரோத கடலட்டை பண்ணை குறித்த எமது கடிதத்துக்கு பதில் தராதுவிட்டால் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்புவோம்!

## கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாச சம்மேளன தலைவர் அன்னராசா எச்சரிக்கை





யாழ். மாவட்டத்தில் கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் எதற்கு இருக்கிறது என கேள்வியெழுப்பிய யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அ.அன்னராசா, சட்டவிரோத கடலட்டை பண்ணை தொடர்பாக திணைக்களத்துக்கு நாங்கள் கடிதம் எழுதியபோது, அதற்கு எவ்வித பதிலையும் இதுவரை அளிக்கவில்லை என குற்றஞ்சாட்டினார்.

அத்தோடு, நாங்கள் கடலட்டை பண்ணைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். யாழ்ப்பாணத்தில் உள்ள 118 கடற்றொழில் சங்கங்களின் கருத்தை நாம் பிரதிபலிக்க வேண்டும். – என்றார்.

சமகால நிலைமை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அ.அன்னராசா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடற்றொழிலாளர்களுக்கு கடலட்டை பண்ணை தொடர்பான சந்தேகங்களும் கேள்விகளும் எழுந்த நிலையில், அதைப் பற்றிய முறைப்பாடுகளும் சம்மேளனத்துக்கு கிடைத்தன.

அதன் அடிப்படையிலேயே கடலட்டை பண்ணைகளை மட்டுப்படுத்தி, சிறு தொழிலாளர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மீன் உற்பத்தியாகும் பிரதேசங்களில் கடலட்டை பண்ணை அமைக்கக் கூடாது என்றும் கோரினோம்.

அனுமதி பெற்று கடலட்டை பண்ணையை முன்னெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டால், அதில் எமக்கு எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.

கடலில் சீட் போட்டு கடலட்டை பண்ணைக்கு கொட்டில் அமைப்பதற்கு எந்த அதிகாரமும் யாருக்கும் இல்லை. இவர்களுக்கு அதிகாரம் வழங்கியது யார்?

குறிப்பாக, கொழும்புத்துறை பகுதியில் ஹோட்டல் போன்று கடலட்டை பண்ணைக்கு கொட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

2023 ஜனவரிக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் நாங்கள் அனுப்பிய கடிதத்துக்கு பதில் அனுப்பாவிட்டால், ஜனாதிபதி உட்பட சகல வெளிநாட்டு தூதரகங்களுக்கும் இது தொடர்பாக மகஜர் கொடுப்போம்.

மக்களுக்கு சேவை செய்வதாக கூறிக்கொண்டு அந்த திணைக்களம் எதற்கு இருக்கின்றது என தெரியவில்லை. 5000 ஏக்கரில் கடலட்டை அமைக்கப்படுமென கடற் றொழில் அமைச்சர் கூறுகிறார்.

கரையோர சூழலை பாதுகாக்க வேண்டிய குறித்த திணைக்களம் இந்த விடயத்தில் மௌனமாக இருக்கிறது எனவும் தெரிவித்தார்.




# மதில் இடிந்து விழுந்ததில் இளைஞன் பரிதாபச் சாவு!

## யாழில் சம்பவம்

யாழ்ப்பாணம் தும்பளை பகுதியில் மதில் இடிந்துவிழுந்ததில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தும்பளை செம்மண்பிட்டி பகுதியைச் சேர்ந்த விக்னராஜா கிருஷ்ணன் (வயது 32) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

வீட்டின் மதிலில் நின்ற போது, மதிலுடன் சேர்ந்து விழுந்ததில் தலையில் படுகாயமடைந்த குறித்த இளைஞன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து 8 கைதிகள் விடுதலை!

நத்தார் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து 8 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என். பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற கைதிகள் விடுதலை செய்யப்படும் நிகழ்வில் பலரும் கலந்துகொண்டனர்.

சிறு குற்றம் புரிந்த தண்டணைப் பணம் செலுத்தாத கைதிகளே நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தொழிற்துறையுடன் தொடர்புடைய பொருள்களுக்கான இறக்குமதி தடையை நீக்குவது தொடர்பில் அவதானம்

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தகவல்



நாட்டில் காணப்பட்ட கடும் டொலர் நெருக்கடி காரணமாக ஆயிரத்துக்கும் அதிகமான பொருள்களுக்கு இறக்குமதி தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஏற்றுமதி தொழிற்துறை, விவசாயத்துறை, மின்பிடித்துறை உள்ளிட்டவற்றுடன் தொடர்புடைய பொருள்களுக்கான இறக்குமதி தடையை நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதுவரை 670 பொருள்களுக்கான இறக்குமதி தடை விதிக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், இவற்றில் பெரும்பாலானவை எமது நாட்டில் தயாரிக்கப்படக்கூடியவை ஆகும்.

வெசாக் கூடுகள், பட்டங்கள் மற்றும் யோக்கட் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் இவற்றில் உள்ளடங்குகின்றன.

எனவே, அடுத்த வருடத்திலிருந்து இவ்வாறான பொருள்களை மீண்டும் இறக்குமதி செய்வதா அல்லது நாமே தயாரிப்பதா என்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

கடந்த சில மாதங்களில் 1,465 பொருள்களுக்கு இறக்குமதி தடை விதிக்கப்பட்டது. நாட்டில் நிலவிய கடும் டொலர் தட்டுப்பாடு காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும், அண்மையில் 795 பொருள்களுக்கான இறக்குமதி தடை நீக்கப்பட்டது. 470 பொருள்களுக்கான இறக்குமதி தடை தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது. அவை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஏற்றுமதி தொழிற்துறை, விவசாயத்துறை, மின்பிடித்துறை உள்ளிட்டவற்றுடன் தொடர்புடைய பொருள்களுக்கான இறக்குமதி தடையை நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. – என்றார்.

# பேக்கரி, சிற்றுண்டிச்சாலைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்படும்!

## அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை

மின்சார கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் அடுத்த மாதம் முதல் நாடளாவிய ரீதியில் உள்ள சகல பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலைகளையும் மூடவேண்டிய நிலை ஏற்படும்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை டெங்கு ஒழிப்பு மத்திய நிலையமாக அறிவித்தால், நுளம்பு பெருக்கத்தையாவது கட்டுப்படுத்த முடியும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபைக்கு நட்டம் நட்டம் எனக் குறிப்பிடும் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர மின்சார சபை நட்டமடைவதற்கான காரணத்தைப் பகிரங்கப்படுத்தவில்லை.

நாட்டு மக்களுக்கு இலவசமாக மின்சாரம் விநியோகிக்கப்படவில்லை என்பதை அமைச்சர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாட்டு மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு மின்சார கட்டணம் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்சாரத்தை சிக்கனமாக பாவித்தாலும், குறைந்தபட்ச மின்கட்டணம் 5 ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகிறது.

இதனால் நாட்டு மக்கள் சொல்லொணா துயரங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

மின்கட்டண அதிகரிப்பால் பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலை கட்டமைப்பு முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய விலைக்கமைய பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலை உணவுப் பொருள்களின் விலைகளை தீர்மானித்துக்கொள்ள முடியாதளவு நெருக்கடி உள்ளது.

இவ்வாறான பின்னணியில் எதிர்வரும் மாதம் மீண்டும் மின்சார கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் அடுத்த மாதம் முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பேக்கரி மற்றும் சிற்றுண்டிச்சாலைகளையும் மூட வேண்டிய நிலை ஏற்படும்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்கிற ஒன்று எதற்காக உள்ளது என்பதை ஆராய வேண்டும்.

அடுத்த மாதம் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவை டெங்கு ஒழிப்பு மத்திய நிலையமாக அறிவிக்க வேண்டும். அதன் மூலம் நுளம்பு பெருக்கத்தையாவது கட்டுப்படுத்த முடியும். – என்றார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# அரைவாசிக்கும் மேற்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் அரசியல்வாதிகளுக்கு சொந்தம்!

## டலஸ் அழகப்பெரும போட்டுடைப்பு



குடும்பத்தை மையமாக கொண்ட தேர்தல் முறைமையை முடிவுக்கு கொண்டு வருவதற்காக எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை பயன்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நாடுமு முழுவதிலும் இருக்கும் மதுபான விற்பனை நிலையங்களில் பெரும்பாலானவை அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு சொந்தமானவை என்பதாலேயே மதுபான அச்சுறுத்தலில் இருந்து நாட்டை மீட்பது கஷ்டமான காரியமாக மாறியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் சட்ட ரீதியாக அனுமதி பெற்ற 4 ஆயிரத்து 910 மதுபான விற்பனை நிலையங்கள் இருக்கின்றன.

அவற்றில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மதுபான விற்பனை நிலையங்களின் உரிமை தற்போது அரசியலில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்குரியது.

தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 128 மதுபான விற்பனை நிலையங்கள் இருக்கின்றன எனவும் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டை மீளக் கட்டியெழுப்புகின்ற திட்டமெதுவும் ஜே.வி.பியிடமில்லை

## திஸ்ஸ அத்தநாயக்க சாடல்

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் திட்டம் எதுவும் மக்கள் விடுதலை முன்னணியிடம் இல்லை என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் பிரபலமடைவதற்காக அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, மக்கள் மத்தியில் கட்டுக்கதைகளைக் கூறிவருகிறார் எனவும் சாடியுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைக் கூறியுள்ளார்.

அவ்வாறு பெற்றுக்கொள்ளும் பிரபலத்தை தேர்தலில் வாக்குகளாக மாற்ற முடியாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் பொறுப்பதிகாரிகள் 269 பேருக்கு அதிரடி இடமாற்றம்

நாடளாவிய ரீதியில் 269 பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் அமுலாகும் வகையில், இந்த இடமாற்றம் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அந்த அமைச்சின் செயலரின் தேவைக்கு அமைய வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களத்துக்குள் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபரின் எதிர்ப்பையும் மீறி, அதனைக் கவனத்தில் கொள்ளாது இந்த இடமாற்றம் வழகப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

தேர்தலை இலக்குவைத்து இந்த இடமாற்றம் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களத்துக்குள் பரவலாக பேசப்படுகின்றது.

பொலிஸ் மா அதிபரின் கையெழுத்து மற்றும் நேரடி உத்தரவு எதுவும் இன்றி, பொலிஸ் திணைக்களத்தின் மனித வள முகாமைத்துவ பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம்.என். சிசிர குமாரவின் கையெழுத்துடன், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலரின் உத்தரவுக்கு அமைய இந்த இடமாற்றம் வழகப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர், இந்த இடமாற்ற கட்டளையை கடந்த 2020 நவம்பர் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2202/04 ஆம் இலக்க வர்த்தமானிக்கு அமைய வெளியிட்டுள்ளார்.

எனினும் 21ஆவது திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்துள்ள நிலையில், குறித்த வர்த்தமானி அறிவித்தல் வலுவிழந்துள்ளதாகவும், வலுவிழந்த வர்த்தமானியின் கீழ் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் இந்த இடமாற்றங்களை வழங்கியுள்ளார் எனவும் பொலிஸ் திணைக்களத்துக்குள் பரவலாக பேசப்படுகின்றது.

இது தொடர்பில் சட்ட மா அதிபரும் பொலிஸ் ஆணைக் குழுவுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கியுள்ளார் என அறிய முடிகின்றது.

20 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அரச சேவை ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம், பதவி உயர்வு உள்ளிட்ட விடயங்கள், 21ஆவது அரசியல் திருத்தச் சட்டம் பிரகாரம் மீண்டும் பொலிஸ் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடந்த 15 ஆம் திகதி சட்ட மா அதிபர் ஏ/379/2022 எனும் இலக்கமிடப்பட்ட கடிதம் ஊடாக ஆலோசனை வழங்கியுள்ளதாக பொலிஸ் ஆணைக் குழுவின் செயலர் தமரா டி பெரேரா கடந்த 20 ஆம் திகதி பொலிஸ் மா அதிபருக்கும் கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.

அவ்வாறான நிலையிலேயே தற்போது, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலரின் உத்தரவின் கீழ் 269 பொலிஸ் பொறுப்பதிகாரிகள் இடமாற்றப்பட்டுள்ளமை சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

# போலியாக விசாரணைகளை நடத்தி முடிப்பதற்கு வடக்கு கல்வி அமைச்சும் திணைக்களமும் முயற்சி!

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

இலங்கை ஆசிரியர் சங்கம் வழங்கிய முறைப்பாடுகளை போலியான கோணத்தில் விசாரணை செய்து முடிக்க வட மாகாண கல்வி அமைச்சும் வட மாகாணக் கல்வி திணைக்களமும் முயற்சிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவர் தீபன் திலீசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

மோசடிக் கும்பல்களை வைத்துக்கொண்டு வட மாகாண கல்வியை முன்னேற்ற முடியாது. பெற்றோர், பிள்ளைகளின் கையொப்பத்துடன் இலங்கை ஆசிரியர் சங்கம் வழங்கிய முறைப்பாட்டுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரச பாடசாலைகளில் வசதிகள் சேவைக்கட்டணம் தவிர வேறெந்த நிதியோ அன்பளிப்போ பாடசாலையால் வசூலிக்க முடியாதென சுற்றுநிருபம் இருக்கும்போது அதையும் மீறி நிதி வசூலிக்கப்படும் போது அதை ஆதாரபூர்வமாக நிரூபித்தபோதும் எந்த நடவடிக்கையும் இல்லை.

வட மாகாண கல்வித்துறையில் உள்ள சீர்கேடுகள் தொடர்பில் 2021டிசெம்பர் மாதம் வட மாகாண ஆளுநர் ஊடகங்கள் வாயிலாக கேட்டுக்கொண்டதற்கிணங்க 100 பக்க முறைப்பாடொன்றை வழங்கியிருந்தோம்.




அதற்கு ஒரு விசாரணைக் குழுவை நியமித்தனர். ஆனால், ஒரு வருடமாகியும் விசாரணை அறிக்கையை சமர்ப்பிப்பதில் தாமத நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் வட மாகாண கல்வியமைச்சில் காணப்படும் சீர்கேடுகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் நிர்வாக ஆளுமையற்ற தன்மைகளை சுட்டிக்காட்டி, வட மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக நாம் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

அதன் பின்னராகவே விசாரணைகளை போலியான வகையில் முடிவுக்கு கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. – என்றார்.

# ஜனாதிபதி நிதிய புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிப்பு

கொழும்பு, டிச. 26

உயர்தர மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தில் இருந்து புலமைப்பரிசில்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

2021(2022) ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றி 2024 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரத்துக்குத் தோற்றத் தகுதி பெற்றுள்ள பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திடமிருந்து புலமைப்பரிசில் வழங்குவதற்காக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதியை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி ஏற்கனவே 2022-12-23 என அறிவிக்கப்பட்டிருந்தாலும் பெற்றோரும் மாணவர்களும் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோள்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதிதிகதியை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய புலமைப்பரிசிலுக்காக விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் அதற்கான விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்து 2022-12-30 ஆம் திகதிக்கு முன்னர் தாம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலையின் அதிபரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

மேலும் 2022-12-23 ஆம் திகதி தொடக்கம் 2023-01-02 ஆம் திகதி வரையான காலப்பகுதி பாடசாலை விடுமுறை ஆகையால் இதற்காக பாடசாலை அலுவலகங்களை திறந்து வைக்கும்படியும் மாணவர்களால் கொண்டுவரப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி நிதியம் கல்வியமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளது.

மேலும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2022-12-30 வரை நீடிக்கப்பட்டுள்ளதே தவிர, விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும் செயன்முறைக்காக நியமிக்கப்பட்ட கால வரையறையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது என்றும் ஜனாதிபதி நிதியம் தெரிவித்துள்ளது.

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உதவித் திட்டம் வழங்கல் நிகழ்வு





காரைநகர் பிரதேச சபையின் 2022 ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள, தெரிவு செய்யப்பட்ட முப்பத்தெட்டு கர்ப்பவதிகளுக்கான சத்துணவுப் பொதி வழங்கும் நிகழ்வு காரைநகர் பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் க.பாலச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த உதவி வழங்கும் நிகழ்வில் தவிசாளர், சபை உறுப்பினர்கள் மற்றும் சபை செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு உதவிகளை வழங்கி வைத்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## திருநீலகண்டரின் மனைவி சொன்னது



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 223

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்ட காலங்களில், அவர்கள் பலத்துடன் இருந்த நாள்களில், அவர்களின் மதியரைஞர் எழுதிய சமர்ப்பணங்கள், கருத்தாக்கங்களில் பேச்சுவார்த்தைகளுக்கு செல்லும் நாடாளுமன்ற அங்கத்தினர்கள் கணக்கெடுத்துக் கொள்ள வேண்டியவையாக, பல விடயங்கள் பல புலம்பெயர் அமைப்புகள் தாங்களாகவும் கூட்டாகவும் வெளியிடும் அறிக்கைகள், ஊடக வெளியீடுகள், முக நூல்களில் பரவலாக உலா வருகின்றன.

அந்த நாள்களில் மதியரைஞர் எழுதிய சமர்ப்பணங்கள் திருநீலகண்டரின் மனைவி கூறியவை போல 'என்னை தொடாதே' என்று இருக்கலாம். ஆனால் இன்றைய யதார்த்தங்களையும் பார்க்க வேண்டும். அவர்களைக் கேள்விக்குறியாக்குவது புலம்பெயரின் இன்னுமொரு பகுதிகளெடுக்கும் முன்னெடுப்புக்களும் அவை பழையபடி, எவ்வளவு தூரம் வளரும் நிலைகளை பாதிக்கும் என்பதுதான் முக்கியமானது,

இந்தப் புலம்பெயரின் 'என்னை தொடாதே!' என்ற குறியீடு தரக்கூடிய பகுதிகள் சொல்வது என்ன?

இந்தப் பகுதிகள் எதனைச் சொல்கின்றன?

*ஜனாதிபதியின் பேச்சு வார்த்தைக்கான அழைப்பு, தமிழ் மக்களின் இனப் படுகொலைக்காக சிங்கள அரசு விளக்கங்களும் கணக்குகளும் கொடுக்க வேண்டும் என்ற அழுத்தங்கள் சர்வதேசங்களால் தரப்பட, தாங்கள் இவை பற்றி தமிழ் மக்களோடு பேசிக் கொண்டிருக்கிறோம் என திசை திருப்புவதற்காகும்.




* ஒற்றை ஆட்சியில் அமைந்த அரசமைப்புச் சட்டமோ, 13 ஆம் திருத்தத்தில் அமைந்து தோற்றுப் போன மாகாண சபைகளோ, தமிழர்களின் நியாயமான அபிலாசைகளுக்கு தீர்வாகா. ஒற்றை ஆட்சியின் அடிப்படையில் அமைந்த சமஷ்டி கூட தமிழ் தேசத்தின் எதிர்பார்ப்புகளுக்குச் சமனாக வராது.

* தமிழ் மக்கள் திரும்பத் திரும்ப தமது முக்கிய கொள்கை அவை என பல தளங்களில் தெரிவித்துள்ளார்கள். அவற்றை திம்பு மாநாட்டிலும், பின்பு தமிழ் மக்கள் பேரவை 2016 இல் நடத்திய சம்மேளனத்திலும் முன் வைத்துள்ளார்கள். அவை யாவை?

1. தமிழ் மக்கள் ஒரு தேசம் (Nation).

2. அவர்களுக்கு அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத சுயநிர்ணய உரிமை உண்டு.

3. தமிழ் மக்களுக்கென 1948 ஆம் ஆண்டில் இன விகிதாசார அடிப்படையில் வடக்கு, கிழக்கு பாரம்பரிய பிரதேசங்கள் உண்டு. அவை பேரம் பேச பட முடியாதவை.

* புதிய அரசமைப்பு எதுவும் உருவாகுவதற்கு முன்னர் ஓர் ஒப்பந்தம் ( treaty)- டைடன் (Dayton), பெரிய வெள்ளி (Good Friday) ஒப்பந்தங்கள் மாதிரி ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த ஒப்பந்தம் தமிழ் தேசத்தின் சுய நிர்ணயம், அதன் இறைமை, அதையொட்டிய அதன் அதிகாரங்கள், 1948 ஆம் ஆண்டின் இன விகிதாசார அடிப்படையில் அதன் பிரதேசங்கள் என்பன அதன் மூலம் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும்.

* அந்த ஒப்பந்தம் நீதியும் நல்லிணக்கத்துக்குமாக ஏற்படுத்தப்படும் முறைமைகள், வலிந்து காணாமல் ஆக்க பட்டோர், அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்குக் கிழக்கின் ஆயுதப் படைகளின் கைகளில் உள்ள காணிகளின் விடுவிப்பு, ஆயுதப் படைகளின் பின்வாங்கல், அரசின் ஊக்கத்தில் மேற்கொள்ளப்படும் குடியேற்றங்கள் மற்றும் பாதுகாப்புத் துறையில் சீர்திருத்தங்கள் இவை மீள நடவாமைக்கான உத்தரவாதங்கள் எனப் பலவற்றையும் உள்ளடக்க வேண்டும். தமிழ் பகுதிகளில் உண்மையான, பாதுகாப்பான, வெளிப்படையான, சுதந்திரம் தரும் சூழலுக்கு இவை இன்றியமையாதவை.

* அந்த ஒப்பந்தம் இந்த இணக்கங்கள் மீறப்பட்டால் அல்லது ஒருதலைப் பட்சமாக பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களாலோ அல்லது அரசியல் பிரதிநிதிகளாலோ மீறப்பட்டால் அவை அமுலாக்கப்படுவதற்கான வேறு உத்திகள் இல்லாத பட்சத்தில் தமிழ் மக்கள் தாங்களாகவே சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி, அவர்களது அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கலாம் என்ற தரத்தினை கொண்டிருக்க வேண்டும்.

* இந்த ஒப்பந்தம் மூன்றாம் தரப்பு ஒன்றினால் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

– இந்த சமர்ப்பணங்கள் சர்வதேசங்களுக்கு இனப் பிரச்சினைத் தீர்வுகளை இந்த அடிப்படைகளில் அணுகி நிற்குமாறு சர்வதேச நிதி நிறுவனங்கள், இனப் பிரச்சினை இவ்வாறு தீர்க்கப் படாவிட்டால் உதவிகள் எதுவும் தரக் கூடாது எனக் கேட்கிறது.

இவை யாவற்றையுமே 1956 இல் இருந்து, பின் 1976 இல் இருந்து, இறைமை மீட்பாக விடுதலை புலிகளால் எத்தனையோ பேச்சுக்களில், பின் சர்வதேச பேச்சுக்களில், 2009ல் பின் தமிழ்ப் பிரதிநிதிகளால் பேசப்படாதவை அல்ல.

ஆனால், தமிழ் மக்கள் பெற்ற பெறுபேறு நாடாளுமன்றத்தைக் குறி வைத்து நடத்திய தேர்தல் அரசியலும் பின் ஏகோபித்த தலைமையில் விடுதலை புலிகளும்



அவர்களது புலம்பெயர் தலைவர்களும் கோலோச்ச விளைந்ததும்தான்.

இந்த சமர்ப்பணங்களில் கூறப்படுபவற்றின் பல அத்திவாரங்கள் 1987இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய ஒப்பந்தத்தில் இல்லையா? இந்தியா அதனை அமுல் படுத்துவதற்கு பொறுப்பு ஏற்கவில்லையா? பின்னர் நோர்வே பேச்சுக்களில் சர்வதேசம் பொறுப்பு நின்ற இணக்கம் ஒன்றை முதலில் ஏற்று, இப்பொழுது கேட்கப்படும் ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்தி, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை கொண்டு வந்திருக்க முடியாதா? 1987 இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய ஒப்பந்தத்தை அனுசரணை தந்து, செயல்படுத்தி இருந்தால், அன்றில் புலம்பெயர் அதனை சரியாக கையாண்டு இருந்தால், நடந்தவை வேறாக இருக்கலாம். அந்தப் பலங்களும் இல்லாத சமயங்களில், யதார்த்த அரசியல்களில் அப்படியான ஒப்பந்தங்கள் இல்லை என்று வெளியேறுவதில் பயன் யாது?போராட்டங்கள் வெடிக்கும் என்ற வாய்ச்சவடால்களாகத்தானே முடியும்?



(வளரும்...)

## ஒட்டுக்குழுவினரின் .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதம் தரித்த ஒட்டுக்குழுவினரால் தேவாலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் இவ்வாறான ஒட்டுக்குழுவினர் மக்களுக்கு இழைத்த கொடூரங்கள், துரோகங்கள் எம் மக்களுக்கு எதிர்காலத்தில் நிகழாமல் இருக்க கடவுளை இந்நன்னாளில் பிரார்த்திக்கின்றேன். எம் மக்கள் தங்கள் ஆரோக்கியமான எதிர்காலத்தை தாங்களே உருவாக்க வேண்டும் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் 2005 ஆம் ஆண்டு புனித நத்தார் தினத்தன்று மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் இடம்பெற்றநள்ளிரவு ஆராதனையின் போது சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசியல் கட்சிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவை. சோ. சேனாதிராஜாவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சித்தார்த்தன் ஆகியோர் முதலில் சமகால நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினார்கள்.

அதனைத் தொடர்ந்து, வவுனியாவில் இறுதியாக நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின்போது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைத் தமிழரசுக்கட்சி தனியாக முகங்கொடுப்பது பற்றி வெளிப்படுத்திய பிரதிபலிப்புக்கள் பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

அச்சமயத்தில், தமிழரசுக் கட்சியானது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைத் தனித்து முகங்கொடுப்பதாக இருந்தால் தாமதமின்றி அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என்றும், அதன் சாதக, பாதக நிலைமைகள் தொடர்பிலும் சித்தார்த்தன் மற்றும் செல்வம் ஆகியோர் வெளிப்படுத்தினர்.

இந்நிலையில், குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட மாவை. சோ. சேனாதிராஜா,

புளொட், ரெலோ தலைவர்கள் என்னை நேரில் வந்து சந்தித்திருந்தார்கள். அதன்போது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படுவதற்கான சாதக நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தோம்.

இதன்போது தமிழரசுக் கட்சியின் சார்பில் தனியாகப் போட்டியிடுவது பற்றி வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் ஆராய்ந்திருந்தோம்.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில், தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக தோற்றுவிக்கப்பட்ட கட்சியாகும். தற்போதைய நிலையில், கூட்டுச் செயற்பாடு மற்றும் ஒற்றுமையான பயணம் என்பவற்றைத் தமிழரசுக் கட்சி முழுமையாக ஏற்றுக்கொண்டு செயற்படுகின்றது.

அவ்விதமானதொரு சூழலில் தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்காக ஒன்றுபட்ட பயணமே அவசியமாகும். அந்தவகையில், ஒற்றுமையான தேர்தல் உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் முகங்கொடுப்பது பற்றியே தீவிரமான கரிசனையைக் கட்சி கொண்டுள்ளது.

அந்தவகையில் கட்சியானது தனித்துச் செயற்படுவதையோ, தேர்தல்களுக்கு முகங்கொடுப்பதையோ நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# இறைவனின் நித்திய ஆன்மீக சுகம் மக்கள் அனைவருக்கும் கிடைக்குக!

## சபாநாயகர் வாழ்த்து



இறைவனின் நித்திய ஆன்மீக சுகம் மற்றும் அமைதி இலங்கையைச் சேர்ந்த கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மக்களுக்கும் நிச்சயமாகக் கிடைக்க வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நத்தார் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மேலும் அவரின் வாழ்த்துச் செய்தியில் –

'உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிதர்கள்மேல் பிரியமும் உண்டாவதாக' – லூக்கா 2:14

கிறிஸ்து பிறந்த திருநாள் இன்றாகும். இயேசு கிறிஸ்து பிரான் எப்பொழுதும் மக்களுக்கு பணக்காரர், ஏழை என்ற வேறுபாடு காட்டாத ஓர் உன்னதத் தலைவராவார்.

அவர்கள் இறைவனின் குழந்தையாக இந்தப் பூமியில் பிறந்த நாளில், மிகவும் ஏழ்மையான மற்றும் அப்பாவி மனித சமூகமாக இருந்த மேய்ப்பாளர்கள், தேவதூதர்கள் அவர்களுக்கு நல்ல செய்தியைக் கொண்டு வந்ததாக எடுத்துக்கொண்டனர்.

மிகவும் சவாலுக்கு மத்தியில் முழு உலகமும் நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் இந்நாளில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் இறைவனின் நித்திய ஆன்மீக சுகம் மற்றும் அமைதி இலங்கையைச் சேர்ந்த கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மக்களுக்கும் நிச்சயமாகக் கிடைக்க வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்.

சுறுசுறுப்பான வாழ்கை முறையில் இந்த நத்தார் தினத்தைக் கொண்டாடும் உங்கள் அனைவரும், வெறுமனே லௌகீகத்தைப் பின்தொடர்ந்து செல்லாமல், ஆன்மீக ரீதியான ஆறுதல், இறைவனின் ஆசிர்வாதத்தைப் பெறக்கூடிய, இறைவனால் நேசிக்கப்பட்ட மனிதர்களாக வாழப் பிரார்த்திக்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

# மண்மேடு சரிந்து வீழ்த்ததில் இருவர் பரிதாப உயிரிழப்பு!

## அக்குரணையில் சம்பவம்

வீட்டின் மீது மண்மேடு சரிந்து வீழ்த்ததில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கண்டி – அக்குரணை – துன்வில பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்துள்ள இருவரும் கண்டி – அக்குரணை பகுதியை சேர்ந்த 18 மற்றும் 19 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் மழையுடனான வானிலை நீடிக்கும் நிலையில், பல பகுதிகளுக்கு மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாளிகை வீட்டுக்கும் ஏழைக் குடிசைக்கும் ஒரேவிதமான நத்தார் மகிழ்ச்சியை வழங்குகின்றமையே எமது இலக்கு!

## கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



இருளை நீக்கி மனிதர்களிடத்தே சுபீட்சத்தை ஏற்படுத்தும் உண்மையான ஒளியின் வருகையையே நத்தார் பண்டிகையைக் குறிக்கின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோருக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்து விடுதலையின் மகிழ்ச்சியை பறைசாற்றும் ஒரு மகிழ்ச்சியான பண்டிகை இதுவாகும்.

பெத்லஹேமில் ஒரு தொழுவத்தில் பிறந்த குழந்தையே இயேசு கிறிஸ்து ஆவார். இவர் உலகை யதார்த்தமாகப் பார்ப்பதில் பிறப்பிலிருந்தே முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களை விடுவித்து சிறந்த சமுதாயத்தை உருவாக்க அவர் தன் முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தார்.

இலங்கையின் தற்போதைய சமூக, பொருளாதார நெருக்கடி நிலையில் ஒருவரையொருவர் இரக்கத்துடனும் அன்புடனும் வாழ்த்தி, சமூகத்தில் பின்தங்கியுள்ள மக்களுக்கு ஆதரவளிப்பதே நாம் இயேசு கிறிஸ்துவுக்குச் செய்யும் கௌரவமாகும்.

'செலவுகளைக் குறைப்போம், எளிமையாக நத்தார் பண்டிகையைக் கொண்டாடுவோம், துன்பப்படுபவர்களுக்கு நம்மிடம் எஞ்சியிருப்பதைக் கொடுப்போம்' என்று பாப்பரசர் போப் பிரான்சிஸ், மனிதநேயத்தின் மதிப்பைக் கற்பிக்க அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

மாளிகை வீட்டுக்கும் ஏழைக் குடிசைக்கும் ஒரேவிதமான நத்தார் பண்டிகையின் மகிழ்ச்சியை வழங்குவதே எங்கள் அரசாங்கத்தின் இலக்காகும்.

எனவே அனைவருக்கும் அன்பைப் பரப்பும் மற்றும் மனிதநேயத்தைப் பகிர்ந்து கொள்ளும் குடிமக்களாக இந்த பண்டிகைக் காலத்தில் அனைவரும் தங்கள் சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு உறுதியளிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் நலிவுற்றுள்ள மக்களின் நல்வாழ்வுக்கு இயேசு கிறிஸ்துவின் கருணை விடிவு தருவதாக!

## நத்தார் வாழ்த்துச் செய்தியில் ஜீவன் தொண்டமான்

இயேசு பாலகனின் பிறப்பானது உலகவாழ் அனைத்து கிறிஸ்தவ மக்களால் குதூகலமாகக் கொண்டாடப்படும் இவ்வேளையில், இலங்கை மக்களாகிய நாமும் இதில் ஒன்றிணைந்து, அறியாமையையும், அகந்தையையும் அகற்றி மனித குலம் மேம்பாட்டடைய வாழ்த்துவதாக இ.தொ.கா பொதுச் செயலாரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

இயேசுபிரான் உலக விடுதலைக்கு வித்திட்டவராவார். சமூக விடுதலைக்கு மாத்திரமல்லாது, சமய விடுதலைக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த இயேசுவின் கருணை நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்கு விடிவுபெற வேண்டுமென வேண்டுகின்றோம். இன்று எமது அடிப்படை வாழ்வியல் தேவைக்காக போராடி வரும் மலையக மக்களுக்கும் ஜீவாதார உரிமைகளை பெற்றுக் கொடுக்க வழிவகுக்க வேண்டும்.

இலங்கையில் எப்பகுதியிலும் நமது மக்கள் வாழ்ந்தாலும் அவர்களின் இன்னல்கள், துன்பங்கள், துயரங்கள் யாவற்றுக்கும் இந்த நத்தார் தினம் ஒரு விடிவை ஏற்படுத்தும் என்பதில் நாம் திடமாக நம்புகின்றோம். இத்தருணத்தில் கருணை இயேசுவை மனதார பிரார்த்திப்போமாக. சகலருக்கும் நலமும், வளமும், செழிப்பும், சிறப்பும் பெற்றுத்தர வேண்டுமென முழுமனதோடு வாழ்த்துகின்றேன். அனைவருக்கும் எனது இனிய நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும் என ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# நல்லொழுக்கங்களை நத்தார் போதிக்கிறது!

## இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான்



அன்பு, மனிதாபிமானம், சகோதரத்துவம், மத நல்லிணக்கம் என மனித வாழ்க்கைக்குத் தேவையான பல நல்ல ஒழுக்கங்களைக் கற்றுத்தந்த இயேசுபிரானின் பிறந்த நாளைக் கிறிஸ்மஸ் தினமாகக் கொண்டாடி மகிழும் அனைத்து கிறிஸ்துவ சமூகத்தினருக்கும் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் கிறிஸ்மஸ் தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

பாவ வாழ்விலிருந்து மனிதனை மீட்கவே இறைமகன் இயேசு பாலகன் மனித உருவெடுத்தார். அன்புக்கு இருக்கும் மகத்தான சக்தியை உணர்த்தவே இந்த உலகில் இயேசுபிரான் அவதரித்தார்.

இந்நன்னாளில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் கருணைகாட்டி இனநல்லுறவுடன் கூடிய சுபிட்சமான நல்வாழ்வை எதிர்கொள்ள வேண்டும்.

உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவ மக்களும் சகோதரத்துவத்துடன் அன்பு காட்டுபவர்களாகவும், இயேசுவின் போதனைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

ஒவ்வொருவரினதும் உள்ளத்திலே உண்மையான இறையன்பு, சகோதரத்துவம், அமைதி மற்றும் சுபிட்சம் என்பன அவர்களை இயல்பாகவே ஆட்கொண்டிருக்கின்றது. எனவே, ஒவ்வொருவரினதும் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேற இந்நாள் அனைவருக்கும் ஓர் பொன்னாளாக அமையட்டும்.

இயேசுபிரானின் போதனைகளை நினைவு கூர்ந்து அனைவரும் கிறிஸ்மஸை நல்லிணக்கத்தோடும், புரிந்துணர்வோடும் கொண்டாடி மகிழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

# நெருக்கடிக்கு விடுதலையாக பாலனின் பிறப்பு அமையட்டும்!

## வாழ்த்துச் செய்தியில் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்

பொருளாதார நெருக்கடிமிக்கதான காலகட்டத்தில் நாட்டு மக்கள் எதிர்நோக்கியுள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் இறைமகன் இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பு விடுதலையாக அமைய வேண்டுமென்று பிரார்த்திப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் விடுத்துள்ள 'கிறிஸ்மஸ்' வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

பாவத்திலும் அடிமைத்தனத்திலும் வாழும் மக்கள் விடுதலையடைய வேண்டும். ஏழைகள், ஒதுக்கப்பட்டவர்கள் மறுவாழ்வு பெறவேண்டும். அனைத்து மக்களும் இவ்வுலகில் ஒன்றுபட்டு மகிழ்ச்சியுடன் பகிர்ந்து வாழவேண்டுமென்பது இயேசு பாலனின் பிறப்பின் தத்துவமாகும். இந்தப்பிறப்பின் மகத்துவத்தை கிறிஸ்மஸ் தினத்துடன் அர்த்தமுள்ளதாக்குவோம்.

கொரோனா தாக்கம் காரணமாக கடந்த வருடம் கிறிஸ்மஸ் தினங்களைகட்டவில்லை. இம்முறை பொருளாதார நெருக்கடி மேலோங்கியுள்ளது.

காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டவர்கள் என்கிறது சத்திய வேதம். அவ்வகையில் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு இம்முறை 'கிறிஸ்மஸ்' விடுதலையின் செய்தியை வழங்குமென்று எதிர்பார்ப்போம்.



இந்தக் கிறிஸ்மஸ் பண்டிகை கிறிஸ்தவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து மக்களுக்குமான பொதுப் பண்டிகையாக இருந்து வருகின்றமையால் அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.12.2022இல் வெளியிடப்பெற்றது.